பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**14 04 2026** **6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, எதிர்க்கட்சிகளின் கருத்துகளுக்கு முழுமையான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** சித்திரை மாத முதல்நாளான தமிழ்ப் புத்தாண்டையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட தலைவர்கள் பலர் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

**3.** நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்வதற்கான திட்டங்களை திமுக நிறைவேற்றி இருப்பதாக அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**4.** தமிழகத்தில் கடந்த **5** ஆண்டு கால திமுக ஆட்சியில் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை யாருக்கும் பாதுகாப்பில்லாத சூழல் நிலவுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

**5.** ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் அணி **57** ரன் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

முடிவெடுக்கும் செயல்பாடுகளில் மகளிரின் பங்களிப்பு அதிகரிக்கும்போது நிர்வாக நடைமுறைகளில் இயல்பான உணர்வு மேலோங்குகிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மகளிர் இடஒதுக்கீடு சட்ட மசோதா குறித்த மாநாட்டில் உரையாற்றிய பிரதமர், மத்திய அரசின் ஜல் ஜீவன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் வெற்றியே மகளிரின் பங்களிப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்று கூறினார்.

வரும் 2029ஆம் ஆண்டில் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எதிர்க்கட்சிகளின் கருத்துகளுக்கு முழுமையான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாளை மறுநாள் முதல் நாடாளுமன்றத்தில் இந்த சட்டம் குறித்து நடைபெற உள்ள விவாதத்தில் ஒத்துழைப்பு மற்றும் பங்கேற்பின் மூலமாகவே இது முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பது அரசின் முழுமையான முயற்சி என்று பிரதமர் தெரிவித்தார்.

மகளிரை மேலும் வலுப்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் மூலமாக அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும்,

இதற்கு பல்வேறு உதாரணங்கள் உள்ளன என்றும் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் முடிவடைய இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில், வேட்பாளர்கள் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்து வருகிறார்கள்.

தமிழ்நாட்டில் ஒரேகட்டமாக 234 தொகுதிகளிலும், மேற்குவங்கத்தில் முதற்கட்டமாக 152 தொகுதிகளிலும் வரும் 23ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதையொட்டி தேர்தலுக்கான பணிகளில் அலுவலர்கள் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இதுவரை பறக்கும் படையினர் மேற்கொண்ட சோதனையில் 727 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்

பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணைய செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

295 கோடி ரூபாய் மதிப்பிலான தங்கம் மற்றும் வெள்ளிப் பொருட்களும் இதில் அடங்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தேர்தல் பணிக்கான தொழில்நுட்ப ஆயத்தப் பணிகளின் ஒரு பகுதியாக மாநில அளவிலான பயிற்சி முகாம் நேற்று சென்னையில் நடைபெற்றது.

<<<<>>>>

நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்வதற்கான திட்டங்களை திமுக நிறைவேற்றி இருப்பதாக அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மாநிலம் முழுவதும் இளைஞர்களுக்கான அறிவுசார் மையம் தொடங்கி, சாலை வசதி, புதிய தடுப்பணைகள், மேம்பாலங்கள் உள்ளிட்ட ஏராளமான திட்டங்களை தமது அரசு நிறைவேற்றி இருப்பதாக கூறினார்.

பணப்பாக்கம் சிப்காட்டில் அமைக்கப்பட்டுள்ள ஜாகுவார் - லேண்ட் ரோவர் தொழிற்சாலை மூலம் மட்டும் 5 ஆயிரம் பேருக்கு

வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதாகவும், தைவான் நாட்டின் காலணி தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளதையும் திரு. மு.க. ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை யாருக்கும் பாதுகாப்பில்லாத சூழல் நிலவுவதாக பிஜேபி மூத்த தலைவர் டாக்டர் எல். முருகன் குறை கூறியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் அவினாசி தொகுதியில் போட்டியிடும் அவர், தொகுதிக்குட்பட்ட சேவூரில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

திமுக ஆட்சியில் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான பொருட்கள் வரை அனைத்துப் பொருட்களின் விலையும் அதிகரித்துவிட்டதாக டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

சித்திரை மாத முதல்நாள் தமிழ்ப் புத்தாண்டு, விஷு, போய்லா, பைசாகி, மகா பிசுப பனா சங்கராந்தி என பல்வேறு மாநிலங்களிலும், பல்வேறு பெயர்களில் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்தப் பண்டிகைகள் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கொண்டாடும் இந்தியர்கள் அனைவரின் வாழ்விலும், மகிழ்ச்சியையும், செழிப்பையும் கொண்டுவரட்டும் என்று தெரிவித்துள்ளார்.

சித்திரையில் விவசாயத்திற்கான ஆயத்தப் பணிகள் தொடங்கி விளைச்சல் அதிகரிப்பதற்கான பணியில் விவசாயிகள் ஈடுபடுவார்கள் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் சித்திரை முதல் நாளான்று கோவில்களில் பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டு, அதை கேட்க மக்கள் திரண்டு வரும் மரபு இன்றும் தொடர்வதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட 5 தொகுதிகள்.

(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 148 செகண்ட்ஸ்)

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரான் துறைமுகங்களில் கடல்சார் நடவடிக்கைகளை தடை செய்யும் பணிகளை அமெரிக்க கடற்படை தொடங்கியிருப்பதால் மேற்காசியாவில் மீண்டும் பதற்றம் அதிகரித்துள்ளது.

------------

அமெரிக்கா - ஈரான் இடையே சண்டைநிறுத்தம் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படுவதற்கு முன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

------------

நாட்டின் அரசியல் சாசன சிற்பி அண்ணல் அம்பேத்கரின் 136வது பிறந்தநாளையொட்டி இன்று பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

------------

கோடைகால பயிர்களின் சாகுபடி பரப்பு இந்த ஆண்டு சுமார் 64 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பணியில் ஈடுபடும் ஆசியர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதை முன்னிட்டு தென்காசி மாவட்டத்தில் பள்ளிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி நடைபெற்ற விழிப்புணர்வு நடை பேரணியை மாவட்ட தேர்தல் அதிகாரி திருமதி சினேகா தொடங்கி வைத்தார்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரங்கோலி கோலம் மற்றும், மனித சங்கிலி மூலம் 100 சதவீத வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

-------------

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 57 ரன் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வென்றது.

ஹைதராபாதில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 216 ரன் எடுத்தது.

கேப்டன் இஷான் கிஷன் அதிகபட்சமாக 91 ரன் எடுத்தார்.

மற்றொரு வீரர் Heinrich Klaasen 40 ரன் எடுத்தார்.

217 ரன் என்ற கடினமான இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 19 ஓவரில் 159 ரன் எடுத்து தோல்வியடைந்தது.

இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை அணி - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி இரவு 7.30க்கு மணிக்கு தொடங்குகிறது.

--------------

பாங்காக்கில் நடைபெற்ற பாரா உலக வில்வித்தை போட்டியில் சிறப்பாக விளையாடிய இந்திய குழுவினருக்கு மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்த போட்டியில் 7 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலம் உட்பட 13 பதக்கங்களை வென்று இந்திய அணி பதக்கப்பட்டியலில் முதலிடம் பிடித்தது.

இதற்காக இந்திய குழுவினரை நேரில் அழைத்து பாராட்டிய திரு. மன்சுக் மாண்டவியா, சர்வதேச போட்டிகளில் வெற்றி பெறுவது ஒட்டுமொத்த நாட்டிற்கு பெருமையை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று கூறினார்.

வீரர்களுக்கு தேவையான நிதியுதவி, உலகத்தரம் வாய்ந்த பயிற்சி போன்றவற்றின் மூலம் மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு அரசு ஆதரவளித்து வருவதன் உறுதிப்பாட்டை இந்த வெற்றி வெளிப்படுத்தி இருப்பதாகவும், தொடர்ந்து வீரர்கள் பல்வேறு வெற்றிகளை பெற வேண்டும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா வலியுறுத்தினார்.

**<<<<The End>>>>**